பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4

21 06 2024 FRIDAY 7 15 PM

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. ‘யோகா சுற்றுலாவிற்கு’ ஏராளமான வாய்ப்புகள் உள்ளதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

2. பருப்பு வகைகள் உற்பத்திக்கு மத்திய அரசு ஊக்கமளித்து வருவதாக வேளாண்துறை அமைச்சர் திரு. சிவராஜ்சிங் சௌஹான் கூறியுள்ளார்.

3. நிலக்கரி சுரங்க ஒதுக்கீட்டில் வெளிப்படைத்தன்மை முழுமையாக உறுதி செய்யப்படும் என்று அத்துறைக்கான மத்திய அமைச்சர் திரு. கிஷன் ரெட்டி தெரிவித்துள்ளார்.

4. தமிழகத்தில் கள்ளச்சாராய தடுப்பு நடவடிக்கைகள் குறித்து முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின், மாவட்ட ஆட்சியர்கள் மற்றும் காவல்துறை கண்காணிப்பாளர்களுடன் இன்று காணொலி வாயிலாக ஆய்வு மேற்கொண்டார். .

5. உலக கோப்பை வில்வித்தை போட்டியில், இந்தியாவின் Priyansh அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

>>>><<<<

மனிதகுலம் முழுமைக்கும் நன்மை அளிக்கக்கூடியதாக யோகா திகழ்கிறது என்று பிரதமர் திரு. நரேந்திரமோடி கூறியுள்ளார்.

சர்வதேச யோகா தின கொண்டாட்டங்களை இன்று ஸ்ரீநகரில் தொடங்கி வைத்து அவர் பேசினார்.

யோகாவிற்கு தற்போது உலகளாவிய அங்கீகாரம் கிடைத்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

தம்மை சந்திக்கும் வெளிநாட்டு தலைவர்கள் யோகா பற்றி ஆர்வத்துடன் கேட்டறிவதாகவும் பிரதமர் குறிப்பிட்டார்.

துர்க்மெனிஸ்தானில் உள்ள மருத்துவப் பல்கலைக் கழகத்தில் யோகா சிகிச்சை முறை சேர்க்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

மங்கோலியாவில் யோகா அறக்கட்டளை சார்பில், யோகா பயிற்சிகள் பல்வேறு பள்ளிகளில் நடத்தப்பட்டு வருவதாகவும் திரு. நரேந்திர மோடி தெரிவித்தார்.

யோகா சுற்றுலாவிற்கு ஏராளமான வாய்ப்புகள் உள்ளதாகவும், புதிதாக யோகா பொருளாதாரம் உருவெடுப்பதாகவும் திரு. நரேந்திர மோடி கூறினார்.

இந்நாளையொட்டி நாடுமுழுவதும் நடைபெற்ற யோகா தின கொண்டாட்டங்களில் மத்திய அமைச்சர்கள், ஆளுநர்கள் மற்றும் பிஜேபி உள்ளிட்ட பல்வேறு கட்சிகளின் நிர்வாகிகள் பங்கேற்றனர்.

வெளிநாடுகளிலும் இந்திய தூதரகங்கள் சார்பில் யோகா தின கொண்டாட்டங்கள் சிறப்பாக நடைபெற்றன.

>>>><<<<

யோகாவின் பலன்களை உலக அளவில் கொண்டு சென்றதற்கு, பிரதமர் திரு. நரேந்திர மோடி மேற்கொண்ட நடவடிக்கைகளே காரணம் என்று மத்திய அமைச்சர் திரு. பிரல்ஹாத் ஜோஷி கூறியுள்ளார்.

இன்று புதுதில்லியில் நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், யோகா தின கொண்டாட்டங்கள் தற்போது மக்கள் இயக்கமாக உருவெடுத்துள்ளது என்றார்.

யோகா பயிற்சி, உடல்நலனுக்கு மட்டுமின்றி மனநலனை சீராக பராமரிக்க உதவிடும் என்று அமைச்சர் தெரிவித்தார்.

>>>><<<<

மாணவர்களின் நலனை கருத்தில் கொண்டே புதிய கல்விக் கொள்கை கொண்டுவரப்பட்டுள்ளதாக மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா கூறியுள்ளார்.

குஜராத் மாநிலம், அஹமதாபாதில் நடைபெற்ற நிகழ்ச்சியில், 30 அதிநவீன பள்ளிகளை காணொலி வாயிலாக தொடங்கி வைத்து அவர் பேசினார்.

36 கோடி ரூபாய் செலவில் இந்த பள்ளிகள் ஏற்படுத்தப்பட்டிருப்பதாக அவர் கூறினார்.

தேசிய கல்விக்கொள்கையின் கீழ், மாணவர்கள் பயன்பெறும் வகையில் இந்த பள்ளிகள் தொடங்கப்பட்டுள்ளதாக திரு. அமித் ஷா தெரிவித்தார்.

>>>><<<<

மத்திய நிதியமைச்சர் திருமதி. நிர்மலா சீதாராமன் தலைமையில் பட்ஜெட்டுக்கு முந்தைய ஐந்தாவது ஆலோசனைக் கூட்டம் இன்று நடைபெற்றது.

புதுதில்லியில் நடைபெற்ற இந்த ஆலோசனைக் கூட்டத்தில் சிறு குறு தொழில்துறை நிறுவனங்களின் பிரதிநிதிகள் பங்கேற்றனர்.

>>>><<<<

பருப்பு வகைகள் உற்பத்திக்கு மத்திய அரசு ஊக்கமளித்து வருவதாக வேளாண்துறை அமைச்சர் திரு. சிவராஜ்சிங் சௌஹான் கூறியுள்ளார்.

இதுதொடர்பாக பல்வேறு மாநிலங்களின் வேளாண் அமைச்சர்களோடு காணொலி வாயிலாக ஆய்வு மேற்கொண்டு அவர் பேசினார்.

பருப்பு உற்பத்தியில் சுயசார்பினை எட்டும் நோக்கில், பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளதாகவும் அவர் கூறினார்.

பருப்பு வகைகளை குறைந்தபட்ச ஆதரவு விலையில், முழுமையாக கொள்முதல் செய்ய மத்திய அரசு தயாராக உள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

மாநில அரசுகள் பருப்பு உற்பத்தி செய்யும் விவசாயிகளுக்கு ஊக்கமளிக்க வேண்டும் என்றும் அமைச்சர் கேட்டுக் கொண்டார்.

>>><<<<

நிலக்கரி சுரங்க ஒதுக்கீட்டில் வெளிப்படைத்தன்மை முழுமையாக உறுதி செய்யப்படும் என்று அத்துறைக்கான மத்திய அமைச்சர் திரு. கிஷன் ரெட்டி கூறியுள்ளார்.

இன்று ஹைதராபாதில் பத்தாம் கட்ட ஏலத்தை தொடங்கிவைத்து அவர் பேசினார்.

நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் நிலக்கரித்துறை முக்கிய பங்கு வகிப்பதாகவும் அவர் கூறினார்.

முதல்முறையாக தில்லியை தவிர்த்து, ஹைதராபாதில் இந்த ஏலம் நடைபெற்றதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

67 சுரங்க ஒதுக்கீடுகள் இந்த பத்தாம் கட்ட ஏலத்தில் இடம்பெற்றதாக அவர் மேலும் கூறுகிறார்.

>>><<<<

வனவளங்களை பாதுகாப்பதில் வனப்பணி அதிகாரிகள் முக்கியப் பங்கு வகிப்பதாக மத்திய சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை அமைச்சர் திரு. பூபேந்திர யாதவ் கூறியுள்ளார்.

இன்று டேராடூனில் வனப்பணி பயிற்சி அதிகாரிகளுடன் கலந்துரையாடுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

வனப்பகுதிகளில் வசிக்கும் பழங்குடியினரின் நலன்களை பாதுகாக்க அதிகாரிகள் கூடுதல் முக்கியத்துவம் அளிக்க வேண்டும் என்றும் அமைச்சர் கேட்டுக் கொண்டார்.

>>><<<<

மகளிர் மேம்பாட்டிற்கான 100 நாள் சிறப்பு விழிப்புணர்வு இயக்கத்தை மத்திய அரசு தொடங்கியுள்ளது.

இன்று புதுதில்லியில் இதனை தொடங்கி வைத்துப் பேசிய மகளிர் மேம்பாட்டுத்துறை இணையமைச்சர் திருமதி. சாவித்ரி தாக்கூர், மகளிர் நலனுக்காக ஏராளமான திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருவதை சுட்டிக்காட்டினார்.

இருப்பினும் இந்த திட்டங்களின் பயன்கள் முழுமையாக அவர்களை சென்றடையவில்லை என்று அமைச்சர் தெரிவித்தார்.

இதனை களையும் வகையில் இந்த சிறப்பு இயக்கம் தொடங்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அமைச்சர், இந்த சிறப்பு இயக்கத்தை ஒருங்கிணைப்பதற்கென மண்டலம் தோறும் குழுக்கள் ஏற்படுத்தப்படும் என்றார்.

இந்த குழுக்களில் எட்டு உறுப்பினர்கள் இடம்பெறுவார்கள் என்றும் திருமதி. சாவித்ரி தாக்கூர் தெரிவித்தார்.

>>>><<<<

தமிழகத்தில் கள்ளச்சாராய தடுப்பு நடவடிக்கைகள் குறித்து முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் தலைமையில், மாவட்ட ஆட்சியர்கள் மற்றும் காவல்துறை கண்காணிப்பாளர்கள் பங்கேற்ற கூட்டம் இன்று நடைபெற்றது.

காணொலி வாயிலாக நடைபெற்ற இந்தக் கூட்டத்தில், கள்ளச்சாராயத்தை ஒழிப்பதற்கான நடவடிக்கைகள் குறித்து விரிவாக விவாதிக்கப்பட்டது.

>>>><<<<

தமிழகத்தில் விக்கிரவாண்டி சட்டப்பேரவை தொகுதி இடைத்தேர்தலுக்கான வேட்புமனு தாக்கல் இன்று நிறைவடைந்தது.

மனுக்கள் மீதான பரிசீலனை வரும் திங்கட்கிழமை மேற்கொள்ளப்படும்.

மனுக்களை விலக்கிக் கொள்ள வரும் புதன்கிழமை கடைசி நாளாகும்.

அன்றைய தினமே இறுதி வேட்பாளர் பட்டியல் வெளியிடப்படும்.

வாக்குப்பதிவு அடுத்த மாதம் 10ஆம் தேதி நடைபெறும். வாக்கு எண்ணிக்கை 13ஆம் தேதி மேற்கொள்ளப்படும்.

>>>><<<<

ஆந்திர சட்டப்பேரவைக் கூட்டத்தொடர் இன்று தொடங்கியது.

இடைக்கால பேரவைத் தலைவர் திரு. Butchaiah Chowdary புதிய உறுப்பினர்களுக்கு பதவிப்பிரமாணம் செய்துவைத்தார்.

முதலாவதாக, முதலமைச்சர் திரு. சந்திரபாபு நாயுடு பதவிப்பிரமாணம் எடுத்துக் கொண்டார்.

அதனைத் தொடர்ந்து துணை முதலமைச்சர் திரு. பவன் கல்யாணும் இதர உறுப்பினர்களும் பதவியேற்றுக் கொண்டனர்.

இந்தக் கூட்டத்தொடரில் பேரவைத் தலைவர் மற்றும் துணைத்தலைவர் தேர்தல் நடைபெறவுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

>>>><<<<

நீட் இளநிலை மருத்துவப் படிப்பு மாணவர் சேர்க்கைக்கான கலந்தாய்விற்கு தடை விதிக்க உச்சநீதிமன்றம் மறுத்துள்ளது.

இதுதொடர்பான மனுவினை விசாரணை செய்த நீதிபதிகள், இந்த மனு ஏற்கனவேதாக்கல் செய்யப்பட்ட இதர மனுக்களோடு அடுத்த மாதம் 8ஆம் தேதி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படும் என்று தெரிவித்தனர்.

இதுதொடர்பாக தேசிய தேர்வு முகமை, பதில் மனு தாக்கல் செய்யுமாறும் நீதிபதிகள் உத்தரவிட்டனர்.

>>>><<<<

தில்லியின் பல்வேறு பகுதிகளில் குடிநீர் தட்டுப்பாடு தொடர்ந்து நீடித்து வருகிறது.

இதன் காரணமாக, பொதுமக்கள் பெருமளவு பாதிக்கப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

இதற்கிடையே, ஹரியானா அரசு தில்லிக்கு போதிய அளவு தண்ணீர் வழங்கவில்லை என்று கூறி, தில்லி நீர்வளத்துறை அமைச்சர் செல்வி அதிஷி காலவரையற்ற உண்ணாவிரத போராட்டத்தை தொடங்கியுள்ளார்.

தில்லி மக்களுக்கு நியாயம் கிடைக்க வேண்டும் என்ற நோக்கில் இந்த போராட்டத்தை தொடங்கியுள்ளதாக செல்வி அதிஷி தெரிவித்தார்.

இந்நிலையில், குடிநீர் தட்டுப்பாட்டு பிரச்சினைக்கு ஆம் ஆத்மி கட்சியே காரணம் என்று பிஜேபி குற்றம் சாட்டியுள்ளது.

புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய தில்லி பிரதேச பிஜேபி தலைவர் திரு. வீரேந்திர சச்தேவா, தில்லிக்கு போதிய அளவு தண்ணீரை வழங்குவதாக ஹரியானா அரசு ஏற்கனவே தெளிவுபடுத்தியுள்ளதை சுட்டிக்காட்டினார்.

ஆம் ஆத்மி இப்பிரச்சினையை அரசியலாக்குவதாகவும் அவர் குற்றம் சாட்டினார்.

ஊடகங்களின் கவனத்தை ஈர்க்கும் வகையில் ஆம் ஆத்மி இதுபோன்ற நடவடிக்கைகளில் ஈடுபடுவதாகவும் திரு. வீரேந்திர சச்தேவா தெரிவித்தார்.

>>>><<<<

பங்களாதேஷ் உடனான நல்லுறவு மேலும் வலுப்படுத்தப்பட வேண்டும் என்பதில் உறுதியுடன் உள்ளதாக இந்தியா கூறியுள்ளது.

இன்று புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய வெளியுறவுத்துறையின் செய்தி தொடர்பாளர் திரு. ரன்தீர் ஜெய்ஸ்வால், இருநாடுகளுக்கு இடையே பல்வேறு ஒப்பந்தங்கள் நாளை கையெழுத்திடப்பட உள்ளதாக தெரிவித்தார்.

பங்களாதேஷ் பிரதமர் திருமதி. ஷேக் ஹசீனா, புதுதில்லியில் பிரதமர் திரு. நரேந்திர மோடியுடன் பேச்சு நடத்தவுள்ளதையும் அவர் சுட்டிக்காட்டினார்.

>>>><<<<

கேரளாவில் அடுத்த ஐந்து தினங்களுக்கு கன மற்றும் அதிகனமழைக்கு வாய்ப்பு உள்ளதாக வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

கர்நாடகாவின் கடலோரப் பகுதிகளிலும் கனமழை பெய்யக்கூடும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அருணாச்சலப்பிரதேசம், அஸ்ஸாம், மேகாலயா, நாகாலாந்து, மணிப்பூர், மிஸோரம், திரிபுரா மற்றும் மேற்குவங்கத்திற்குட்பட்ட ஒரு சிலபகுதிகளிலும் அடுத்த ஐந்து தினங்களுக்கு மழைக்கு வாய்ப்புள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

உத்தரபிரதேசத்தின் ஒரு சில பகுதிகளில் வெயிலின் தாக்கம் தொடர்ந்து அதிகரித்தே காணப்படும் என்றும் வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

>>>><<<<

உலக கோப்பை வில்வித்தை போட்டியில், இந்தியாவின் Priyansh அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

துருக்கியில் நடைபெற்று வரும் இப்போட்டியின் காலிறுதி ஆட்டத்தில் அவர், 149-147 என்ற புள்ளிக்கணக்கில் சீனாவின் Akcaoglu-வை வென்றார்.

>>>><<<<

Slovakia சர்வதேச தடகள சாம்பியன் போட்டியில் இந்தியா ஒரு வெள்ளி, ஒரு வெண்கலப்பதக்கம் வென்றது.

மகளிர் நீளம் தாண்டுதலில் Shaili Singh வெள்ளிப்பதக்கத்தையும், ஆடவர் Triple Jump பிரிவில் Endhorse Paul வெண்கலப்பதக்கத்தையும் வென்றனர்.

>>>>END<<<<